# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319453

1. District : Tiruppur PS: VAC Year: 2026 FIR No.: 9/2026/AC/TPR Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 03.08.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (b)
(ii) Act சட்டம்: Act 1988 as amended in Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : June 2026 Date to : On 03.07.2026 at about 11.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 27.07.2026 at about 09.20 hrs & 09.55 hrs
Time Period : Time from : Time to : 31.07.2026 at about 11.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை 03.08.2026 at about 14.30 hrs

(b) Information Received at PS. Date : 02.08.2026 Time : 18.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 03.08.2026 Time : 18.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD.Vol.I நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Tamil Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: At about 55 kms South East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : O/o Block Development Office,
முறைக் காவல் எண் முகவரி Vellakoil Panchayat Union,
Tiruppur District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. K. Ravichandran (b) Father's/ Husband's Name : C. Kuppusamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 49/2026 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : Contractor (g) Address : Door No. 1/53 Kovilpalayam
தொழில் முகவரி Mangalapatti Post, Muthur via,
Kangeyam Taluk, Tiruppur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars: (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Senthilkumar Manager (General) Block Development Office, Vellakoil Panchayat Union, Tiruppur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

3/8/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

03.08.2026.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 03.08.2026.

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police, எண்
VBAC, Tiruppur

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 9/2026/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 03.08.2026- ம் தேதி மாலை 18.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.K.K.ரவிசந்திரன், த/பெ.C.குப்புசாமி, கதவு எண்.1/53 கோவில்பாளையம், மங்களபட்டி போஸ்ட், முத்தூர் வழி, காங்கயம் தாலுகா, திருப்பூர் மாவட்டம் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர். K.K.ரவிசந்திரன், த/பெ.C.குப்புசாமி, கதவு எண்.1/53 கோவில்பாளையம், மங்களபட்டி போஸ்ட், முத்தூர் வழி, காங்கயம் தாலுகா, திருப்பூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர் மாவட்டம். நான் திருப்பூர் மாவட்டம், காங்கயம் தாலுகா, முத்தூர் வழி, மங்களபட்டி போஸ்ட், கோவில்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் வைஷ்ணவி கன்ஸ்ட்ரக்சன்ஸ் என்ற பெயரில் இரண்டாம் நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய்து 9 வருடமாக DRDA மற்றும் வெள்ளக்கோவில் யூனியனில் அரசு ஒப்பந்த வேலைகளை செய்து வருகிறேன். எனது நிறுவனத்தில் சூப்பர்வைசராக நந்தகுமார் என்பவர் கடந்த 7 வருடமாக வேலை செய்து வருகிறார். அவர் காண்ட்ராக்ட் பணி சம்பந்தமாக அரசு அலுவலகங்களுக்கு செல்வது மற்றும் சைட்டில் வேலைகளை கவனிப்பது போன்றவைகளை கவனித்து வருகிறார். திருப்பூர் மாவட்டம், வெள்ளகோயில் வட்டாரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (MLACDS) 2024-25 நிதியிலிருந்து வெள்ளக்கோவில் தாலுகா, மேட்டுப்பாளையம் ஊராட்சி, குழலிபாளையம் சி.எஸ்.ஐ அரசு நிதியுதவி பெறும் துவக்கப்பள்ளியில் சமையல் அறை கட்டிடம் கட்டும் பணிக்கும், வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சி, சேனாபதிபாளையம் சி.எஸ்.ஐ அரசு நிதியுதவி பெறும் துவக்கப்பள்ளியில் சமையல் அறை கட்டிடம் கட்டும் பணிக்கும் வெள்ளகோயில் யூனியனில் டெண்டர்

விடப்பட்டிருந்தது. நான் அந்த டெண்டரில் கலந்து கொண்டேன். மேட்டுப்பாளையம் ஊராட்சி, குழலிபாளையம் சி.எஸ்.ஐ அரசு நிதியுதவி பெறும் துவக்கப்பள்ளியில் சமையல் அறை கட்டிடம் கட்டும் பணியை ரூ.7,43,000/- மதிப்பீட்டிலும், சேனாபதிபாளையம் சி.எஸ்.ஐ அரசு நிதியுதவி பெறும் துவக்கப்பள்ளியில் சமையல் அறை கட்டிடம் கட்டும் பணியை ரூ.7,43,000/- மதிப்பீட்டிலும் செய்வதற்கு வெள்ளகோயில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அலுவலக ந.க.எண்.1239/2024/அ2 நாள்:15.07.2024 படி வேலை உத்தரவு எனக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் வெள்ளகோயில் வட்டாரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (MLACDS) 2025-26 நிதியிலிருந்து வேலப்பன் நாயக்கன்வலசு ஊராட்சி சேனாபதிபாளையம் ஆதிதிராவிடர் காலனியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கும், வேலப்பன்நாயக்கன்வலசு ஊராட்சி காந்திபுரம் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி 2000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கும் டெண்டர் விடப்பட்டிருந்தது. நான் அந்த டெண்டரில் கலந்து கொண்டேன். வேலப்பன் நாயக்கன்வலசு ஊராட்சி சேனாபதி பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் அமைக்கும் பணியை ரூ.6,25,000/- மதிப்பீட்டிலும், வேலப்பன் நாயக்கன்வலசு ஊராட்சி காந்திபுரம் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி 2000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணியை ரூ.6,40,000/- மதிப்பீட்டிலும் வேலை செய்வதற்கு வெள்ளகோயில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அலுவலக ந.க.எண்.963/2025/அ2 நாள்:14.05.2025 படி வேலை உத்தரவு எனக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த பணிகளை செய்யும் போது பொதுமக்கள் அப்ஜக்சன் தெரிவித்ததால் அதிகாரிகள் பேசி சுமூகமான முடிவு ஏற்பட்ட பின்னர் வேலைகள் தொடங்கப்பட்டு 2025-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் முடிக்கப்பட்டது. அந்த 4 பணிகளுக்கான எம்.புக் மற்றும் பில்களை வெள்ளகோயில் யூனியன் உதவி பொறியாளர் எழுதினார். அந்த பணிகளுக்கான தொகை நீண்ட நாட்களாக வெள்ளகோயில் யூனியனிலிருந்து விடுவிக்காததால் நான் சொன்னதன்

பேரில் பலமுறை எனது சூப்பர்வைசர் நந்தகுமார் வெள்ளகோயில் யூனியன் அலுவலகத்திற்கு சென்று எம்எல்ஏ பண்ட் பார்க்கும் சத்துணவு திட்ட மேனேஜர் திரு.முருகேசன் மற்றும் பொது மேனேஜர் திரு.செந்தில்குமார் அவர்களை பார்த்து பில் தொகைகளை விடுவிக்க கேட்டுள்ளார். அவர்கள் அந்த வேலைகளுக்கான பண்ட் வரவில்லை என்று கூறியுள்ளனர். அப்போது மேனேஜர் திரு.செந்தில்குமார் அவர்கள் 4 பில்களை பாஸ் செய்வதற்கு தனக்கு தனியாக பணம் ரூ.20,000/- உனது ஓனரிடம் வாங்கி வந்து கொடு என்று கூறியுள்ளார். வேலை முடித்து 6 மாதம் ஆகியும் பில் தொகை வராததால் நான் 10.6.2026 தேதி காலை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று மாவட்ட ஆட்சியர் அவர்களை பார்த்து வெள்ளகோயில் யூனியனில் எம்எல்ஏ பண்டில் செய்த வேலைகளுக்கான தொகை வேலை முடித்து 6 மாதங்கள் ஆகியும் விடுவிக்கப்படவில்லை என கேட்ட போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் என்னிடம் எம்எல்ஏ பண்ட்டில் செய்த வேலைகளுக்கான தொகை எதுவும் பெண்டிங் இல்லை என்றும் PD யிடம் கேளுங்கள் என்று கூறினார்கள். நான் அப்போதே PD திருமதி.சங்கமித்திரை அவர்களிடம் இதுசம்பந்தமாக மனு கொடுத்து கேட்ட போது அவர் செக்சனில் கேட்டு நீங்கள் வேலை செய்த பணிகளுக்கான தொகை பிப்ரவரி மாதமே வெள்ளகோவில் யூனியன் அக்கவுண்டிற்கு அனுப்பி விட்டதாக கூறினார். அதன்பின்னர் நான் வெள்ளகோயில் யூனியன் அலுவலகத்திற்கு சென்று PD அவர்கள் சொன்ன விபரத்தை மேனேஜர் திரு.முருகேசன் அவர்களிடம் தெரிவித்தபோது அவர் செக் செய்து பில் போடுவதாக கூறினார். அதன்பின்னர் எனது நிறுவனத்தின் பெயரில் குழலிபாளையம் மற்றும் சேனாபதிபாளையத்தில் சமையல் அறை கட்டிடத்திற்கான தொகை ரூ.13,57,033/- SBI வங்கியில் உள்ள அக்கவுண்டிற்கு 12.6.2026 தேதி வந்தது. ஆனால் ஆழ்துளை கிணறு அமைத்ததற்கான பில் தொகை வராததால் நந்தகுமாரை யூனியன் அலுவலகத்திற்கு அனுப்பி கேட்டு வர சொன்னேன். நந்தகுமார் யூனியன் அலுவலகத்திற்கு சென்று மேனேஜர் திரு. செந்தில்குமார் அவர்களை பார்த்து பில் தொகை சம்பந்தமாக கேட்டுள்ளார். அப்போது மேனேஜர் திரு.செந்தில்குமார் அவர்கள் PD அலுவலகத்திலிருந்து சொன்னதால் தான் உங்களுக்கு 2 பில் தொகையை பாஸ் செய்து விடுவித்தேன். ஏற்கெனவே பாஸ் செய்த 2 பில்லுக்கும்

பெண்டிங்கில் உள்ள 2 பில்லுக்கும் சேர்த்து தனியாக பணம் ரூ.20,000/- உனது ஓனரிடம் வாங்கி வந்து கொடுத்தால் தான் பெண்டிங் 2 பில்களை பாஸ் செய்வேன் என்று கூறியுள்ளார். அதற்கு நந்தகுமார் ஓனரிடம் இதுபற்றி சொல்கிறேன் என்று கூறிவிட்டு வந்து என்னிடம் அந்த விவரங்களை தெரிவித்தார். அதன்பின்னர் நந்தகுமார் பெண்டிங் பில் தொகை சம்பந்தமாக இரண்டு மூன்று முறை யூனியன் அலுவலகத்திற்கு சென்று மேலாளர் திரு.செந்தில்குமார் அவர்களை பார்த்து கேட்ட போது அவர் நீ சும்மா சும்மா வந்து கேட்டால் பில் பாஸ் செய்ய முடியாது. ஓனரிடம் நான் கேட்ட பணத்தை வாங்கி வரவேண்டும் என்று கண்டிப்புடன் கூறியுள்ளார். அதன்பின்னர் எனது நிறுவனத்தின் பெயரில் சேனாபதிபாளையத்தில் போர்வெல் அமைத்ததற்கான பில் தொகை ரூ.5,75,324/- SBI வங்கியில் உள்ள அக்கவுண்டிற்கு 23.6.2026 தேதி வந்தது. காந்திபுரத்தில் போர்வெல் அமைத்ததற்கான பில் தொகை அக்கவுண்டிற்கு வராததால் 3.7.2026 தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நந்தகுமார் வெள்ளகோயில் யூனியன் ஆபீசுக்கு சென்று மேனேஜர் திரு.செந்தில்குமார் அவர்களை பார்த்த போது அவர் ஏற்கெனவே தான் கேட்ட அமவுண்டை கொண்டு வந்துள்ளாயா என்று கேட்டுள்ளார். அதற்கு நந்தகுமார் இல்லை என்று கூறியுள்ளார். உடனே உனது ஓனருக்கு போன் போட்டு கொடு பேசுகிறேன் என்று கூறியுள்ளார். உடனே நந்தகுமார் அவரது செல்போன் எண்.7540023956 லிருந்து எனது செல்போன் எண்.9443038588-க்கு தொடர்பு கொண்டு என்னிடம் பேசி விட்டு மேனேஜர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் போனை கொடுத்தார். அப்போது என்னிடம் பேசிய அவர் உங்களது 4 பில் தொகையை பாஸ் செய்துவிட்டேன். அதற்கு எனக்கு பணம் ரூ.20,000/- கொடுக்கவேண்டும் என ஏற்கெனவே நந்தகுமாரிடம் சொல்லியுள்ளேன், அந்த பணத்தை கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் இன்னும் ஒரு பில் போடவில்லை. அதை போட்டுவிடுங்கள் பிறகு பார்க்கலாம் என்று சொன்னேன். அவர் உங்களது பில் ரெடியாக உள்ளது எனது லாக்இன்லிருந்து பாஸ் செய்து விடுகிறேன், அமவுண்டை சீக்கிரமாக கொடுங்கள் என்று கூறினார். நான் சரி பார்க்கலாம் என்று கூறினேன். உடனே அவர் போனை கட் செய்துவிட்டார். அதன்பின்னர் எனது நிறுவனத்தின் பெயரில் காந்திபுரத்தில் போர்வெல்

அமைத்ததற்கான பில் தொகை ரூ.5,11,378/- SBI வங்கியில் உள்ள அக்கவுண்டிற்கு 8.7.2026 தேதி வந்தது. இந்நிலையில் 27.7.2026 தேதி காலை சுமார் 9.20 மணியளவில் எனது செல்போன் எண்.9443038588 க்கு வெள்ளக்கோயில் யூனியன் ஆபிஸ் மேனேஜர் திரு.செந்தில்குமார் அவர்கள் அவரது செல்போன் எண்.7402905470 லிருந்து தொடர்பு கொண்டு உங்களது 4 பில் தொகையையும் போட்டுவிட்டதாகவும், தான் கேட்ட அமவுண்ட் 20,000/- த்தை கொடுங்கள் என்றும் உங்களது பில்களை பாஸ் செய்ததற்கு நான் கேட்ட அமவுண்டை நந்தகுமாரிடம் கொடுத்துவிடுங்கள் என்று வற்புறுத்தி கூறிவிட்டு போனை வைத்தார். அன்றைக்கு சூப்பர்வைசர் நந்தகுமாரின் செல்போனுக்கு மேனேஜர் திரு.செந்தில்குமார் அவர்கள் சுமார் 9.15 மணியளவில் அழைத்த போது நந்தகுமார் போனை எடுக்காத விபரத்தையும், அதன்பின்னர் நந்தகுமார் சுமார் 9.55 மணியளவில் மேனேஜர் திரு.செந்தில்குமார் அவர்களுக்கு தொடர்பு கொண்ட போது அவர் உங்களது ஓனரிடம் அமவுண்ட் பற்றி பேசி விட்டதாகவும் பணத்தை வாங்கி வந்து கொடுக்குமாறு சொன்னதாக என்னிடம் சொன்னார். அதன் பிறகு 31.7.2026 தேதி காலை சுமார் 11.30 மணியளவில் மேனேஜர் திரு.செந்தில்குமார் அவர்கள் எனது செல்போனுக்கு அழைத்து பில்களுக்கு தான் கேட்ட அமவுண்ட்டை நந்தகுமாரிடம் கொடுத்து அனுப்புங்கள் என்று சொன்னார். நான் நந்தகுமார் வெளிவேலையாக உள்ளார், அவர் வந்தபின்னர் கொடுத்து அனுப்புவதாக கூறிய போது திங்கட்கிழமை மதியத்திற்கு மேல் அவரிடம் போன் செய்ய சொல்லுங்கள் என்று கூறி போனை வைத்துவிட்டார். இன்று 3.8.2026 தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் நந்தகுமார் அவரது செல்போன் எண்.7540023956 லிருந்து மேனேஜர் திரு.செந்தில்குமார் அவர்களது செல்போன் எண்.7402905470 க்கு தொடர்பு கொண்டு பேசிய போது நாளை காலை பணத்தை எடுத்து வந்து போன் செய்யுமாறு கூறியுள்ளார். எனக்கு திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் யூனியன் அலுவலகத்தில் மேனேஜராக வேலை செய்யும் திரு.செந்தில்குமார் அவர்களுக்கு நான் எனது நிறுவனம் பெயரில் வெள்ளகோயில் யூனியன் பகுதிகளில் சமையலறை மற்றும் போர்வெல் அமைத்த பணிகளுக்கான 4 பில் தொகைகளை ஏற்கனவே பாஸ் செய்ததற்கு லஞ்சமாக பணம் ரூ.20,000/- கேட்டுள்ளதை எனது சூப்பர்வைசர் நந்தகுமார் மூலம் மேனேஜர்

திரு.செந்தில்குமாருக்கு கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் மீது தக்க சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd/-xxxx K.K.Ravichandran 3/8/26. Sir, Received the complaint on 03.08.2026 at 18.30 hrs and made preliminary verification between 18.30 hrs and 19.15 hrs after getting approval from DVAC, Chennai and registered a case in Tiruppur V&AC Cr.No.9/2026/AC/TPR u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 03.08.2026 at 19.15 hrs. Sd/-xxxx (K.Sasilekha). 03/08/2026 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of Tr,K.K.Ravichandran, S/o.C.Kuppusamy, Door.No.1/53, Street, Kovilpalayam, Mangalapatti Post, Muthur Via, Kangeyam Taluk, Tiruppur District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 03.08.2026